ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

109. (i) இம்மாநிலத்தில் யாதொரு தயாரிப்புத் தொழில் பிரிவில் பயன்படுத்துவதற்காக அட்டவணையிடப்பட்ட பொருட்களை வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர் ஒவ்வொருவருக்கும், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் அவர் உறுதிமொழி அளிப்பதற்கு உட்பட்டும் மற்றும் (ii) வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள சென்னை ஏற்றுமதிப் பொருள் தயாரிப்பு மண்டலத்திலும் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் அமைந்துள்ள 100 சதவீத ஏற்றுமதி நோக்கிலான பிரிவுகளிலும் மற்றும் ஏனைய பிரிவுகளிலும் பொருள்கள் தயாரிப்பில் பயன்படுத்துவதற்காக விற்பனை செய்யப்படும் அட்டவணையிடப்பட்ட பொருட்களுக்காக, இறக்குமதியாளரும், தயாரிப்பாளரும் குறிப்பிடப்பட்ட படிவங்களில் உறுதிமொழி அளிப்பதற்கு உட்பட்டும் பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற வணிகரான இறக்குமதியாளர் ஒவ்வொருவருக்கும் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரித் (சி2) துறையின், 21–10–2004 ஆம் நாளிட்ட 167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

110. லோ சல்ஃபர் ஹெவி ஸ்டாக் (எல்.எஸ்.எச்.எஸ்) இறக்குமதி குறித்து (1) திருவாளர்கள் மதுரை பவர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், சமயநல்லூர், (2) திருவாளர்கள் சாமல்பட்டி பவர் கம்பெனி பிரைவேட் லிமிடெட், (3) திருவாளர்கள் ஜி.எம்.ஆர். பவர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின்கீழ் 3 சதவீதத்திற்கு அதிகமாகச் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரித் (சி2) துறையின் 2–3–2005 ஆம் நாளிட்ட 20 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

111. 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 5–1–2005 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)–ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

233. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

234. ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

235. மானியக் கோரிக்கை எண் 25 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)